## பூமாரி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை திரு.K.புஷ்பா

ஊராட்சி மன்றத் தலைவர்

கடித எண் : 1/2024 நாள் : 19.2.2024

பொருள் : மனைப்பிரிவு திருக்கோவிலூர் ஒன்றியம் பூமாரி ஊராட்சி, பூமாரி கிராமம், சர்வே எண்கள்.20/1A 1.16 ஆகியவற்றில் ஏக்கர் (அல்லது) 4700 ச.மீ பரப்பளவு கொண்ட மனைப்பிரிவுக்கான இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடுதல் – சார்பு.

பார்வை : 1. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் : 04.05.2017.

2. அரசாணை எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை UD4 (3) 23.09.2020.

3. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் கள்ளக்குறிச்சி மாவட்டம், அவர்களின் கடித எண். 18364, நாள் : 19.01.2024.

4. பூமாரி ஊராட்சி மன்ற தீர்மான எண் 4, நாள் : 19.2.2024

5. தானப்பத்திரம் எண்.136/2024, நாள் : 09.01.2024.

6. ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா கள்ளக்குறிச்சி வங்கி கருவூல செலுத்திச்சீட்டு (இணையதளம் வாயிலாக)

UPI Transaction ID எண் : 441463260569

இணைதளம் வாயிலபாக எண் : 20240217033053.

**<u>அரசுத்தலைப்பு DPC 0217- 60-800- AS- 22709</u>**

| வ. எண் | வீஸ்தீரணம் | சந்தை மொத்த மதிப்பு (ஏக்கரில் | 3% நில பயன் மாற்ற கட்டணம் |
|---|---|---|---|
| 1 | (1.16 ஏக்கர்) அல்லது 4700 ச.மீ | 4,20,243/– | 12,700/– |

ரூபாய்.12,700/– (ரூபாய் பணிரெண்டாயிரத்து எழுநூறு மட்டில்)

## <u>நிபந்தனைகள்</u>

1. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிப்புமின்றி ரத்து செய்யப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.
2. மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் நகர் ஊரமைப்பு துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அனுமதி பெற வேண்டும் மேலும் நீர் நிலைகள் மற்றும் அரசுக்கு சொந்தமான இடங்கள் என தெரியவந்தால் எவ்வித முன்னறிவிப்புமின்றி அனுமதி ரத்து செய்யப்படும்.
3. மேற்படி மனைப்பிரிவிற்கு ஊரக வளர்ச்சித்துறையால் இறுதி ஒப்புதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமை தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உரிய துறையினால் பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டும்.

## உத்திரவு

திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியம், பூமாரி ஊராட்சி, பூமாரி கிராமம், சர்வே எண்.20/1A 1.16 ஏக்கர் (அல்லது) 4700 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தினை மனைப்பிரிவுகளாக வரன்முறைப்படுத்திட பார்வை 1, 2–ல் காணும் அரசாணையில் தெரிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படியும் பார்வை–3ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் கள்ளக்குறிச்சி அவர்களின் நடவடிக்கையின் வாயிலாக ஒப்புதல் கடிதம் வரப்பெற்றுள்ளது.

பார்வை 4 (அ) 5–ல் காணும் ஊராட்சியின் தீர்மானம் மற்றும் தானப்பத்திரம் அமைந்துள்ள இடத்தினை ஸ்தல ஆய்வு செய்து மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குமாறு தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பார்வை 6–ல் காணும் விவரப்படி புன்செய் வகைப்பாட்டில் இருந்து மனையாக மாற்ற அனுமதி கோரும் இடத்திற்கு விதி எண்.3–ன்படி கூராய்வு கட்டணமாக ரூ.1,000/– (ரூபாய் ஆயிரம்) மேலும் விதி எண்.9–ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை (ரூ.12700/–) நில பயன்மாற்ற கட்டணமாக உரிய அரசு தலைப்பில் செலுத்தி அதற்குண்டான ஆவணங்கள் பின்வரும் விவரப்படி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு திருக்கோவிலூர் ஒன்றியம், பூமாரி கிராமம் சர்வே எண். எண்கள்.20/1A 1.16 ஏக்கர் (அல்லது) 4700 ச.மீ பரப்பளவு கொண்ட பரப்பளவில் அமைந்துள்ள 26 மனைகளுக்கு மட்டும் இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

தலைவர்
பூமாரி ஊராட்சி

பெறுதல்

திரு. A.S.M. அப்துல் ரஹீம், த/பெ.முகம்மது அனிபா,
கதவு எண்.64/37/2, மந்தகரை தெரு,
திருக்கோவிலூர் – 605757,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

<u>நகல்:–</u>

1. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) கள்ளக்குறிச்சி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. உதவி இயக்குநர் (நகர் ஊரமைப்பு) கள்ளக்குறிச்சி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம் கள்ளக்குறிச்சி2நீ. இணை சார்பதிவாளர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
4. வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், திருக்கோவிலூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.